இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 232 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 19 – புதன்கிழமை 02 ஏப்ரல் 2025 – மதுரை 12 + 8 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 232 : Thiruvalluvar Year - 2056 - Panguni 19 - Wednesday 02 April 2025 - Madurai 12+8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.4.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள், 2025–2026 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.4.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, 2025–2026 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) தி.ந. வெங்கடேஷ், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர். செல்வராஜ் மற்றும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II திட்ட இயக்குநர் தெ. பாஸ்கர பாண்டியன், ஆகியோர் உள்ளனர்.

### தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களைத் தாங்கி நூலகங்கள் அமைந்திருப்பதைத் தொடர்ந்து

# திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் நூலகம்!

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



சென்னை, ஏப். 2 -

**"தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களைத் தாங்கி நூலகங்கள் அமைந்திருப்பதைத் தொடர்ந்து திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் நூலகம் அமைக்கப்படும்" என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று (01.04.2025) கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் நூலகங்கள் பற்றிப் பேசும்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு :-



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.4.2025) சட்டமன்றப் பேரவையில், திருச்சிராப்பள்ளியில் உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள மாபெரும் நூலகத்திற்கு "பெருந்தலைவர் காமராசர்" பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார்.

உறுப்பினர் அன்பழகன் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கிற நூலகங்களுக்கு மாபெரும் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கிறது என்ற கருத்தினை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, பொதுப் பணித் துறை சார்ந்த நான்கு ஆண்டு சாதனைகள் தொடர்பான புத்தகத்தில், ஏற்கெனவே இந்த அவையில் அறிவிக்கப்பட்டவாறு, திருச்சியில் 290 கோடி ரூபாய் செலவில் என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட மாபெரும் நூலகத்திற்கு தலைவர் கலைஞர் அவர்களது பெயர் சூட்டப்பட்டிருப்பதாக நான் பார்த்தேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் கோட்டூர்புரத்தில் திறந்து வைக்கப்பட்ட நூலகத்திற்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம் என்று பெயர் சூட்டப்பட்டது.

**மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் மூலம் 16 லட்சம் பேர் பயன்!**

மதுரையில் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, ஒரே ஆண்டில் அதன் கட்டுமானப் பணிகள் முடிவுற்று, மாபெரும் சாதனை செய்யப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது என்பதை எல்லோரும் அறிவர். இதுவரை சுமார் 16 இலட்சம் பொது மக்களும், மாணவர்களும் இந்த நூலகத்தால் பயனடைந்திருக்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து, அண்மையில் கோவையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்ட போது, கோவையில் ஒரு மாபெரும் நூலகம் அமைக்கப்படும் என்று என்னால் அறிவிக்கப்பட்டு, கடந்த நவம்பர் மாதம் அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று, திருச்சியில் அறிவிக்கப்பட்டிருக்கிற நூலகத்திற்கு கடந்த மாதத்தில் நான் அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இந்தப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

கோவையில் தந்தை பெரியார், சென்னையில் பேரறிஞர் அண்ணா, மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின் பெயர்களைத் தாங்கி நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளதோ, அதனைத் தொடர்ந்து, திருச்சியில் அமையவிருக்கும் நூலகத்திற்குப் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரைச் சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

எனவே, தமிழ்நாட்டில் கிராமங்கள் தோறும் பள்ளிகளைத் தொடங்கி, மதிய உணவு அளித்து, இலட்சக்கணக்கான குடும்பங்களின் கல்விக் கண்களைத் திறந்து, தமிழ்நாட்டின் கல்விப் புரட்சிக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரைச் சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, திருச்சியில் கட்டப்பட்டு வரும் நூலகத்திற்கு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயர் சூட்டுவதற்கான அரசாணையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று முதலமைச்சர் என்ற முறையில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் தொடரும் அவலம்!

# தமிழகத்தில் 40 சுங்கச்சாவடிகளில் 10% வரை கட்டணம் உயர்வு!

## அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் அபாயம்! பொதுமக்கள் எதிர்ப்பு!

சென்னை, ஏப். 2 -

தமிழகத்தில் உள்ள 40 சுங்கச்சாவடிகளில் நேற்று முதல் சுங்கக்கட்டண உயர்வு அமலுக்கு வந்தது.

தமிழகத்தில் மொத்தம் 5,381 கி.மீ. தூரத்துக்கு நெடுஞ்சாலைகள் உள்ளது. இந்த நெடுஞ்சாலைகளில் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கீழ் 78 சுங்கச்சாவடிகள் நிறுவப்பட்டு, சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் ஆண்டுக்கு ஒரு முறை, 2 கட்டங்களாக ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டு வருகிறது. இதற்கு வியாபாரிகள், பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள 78 சுங்கச்சாவடிகளில் முதல் கட்டமாக 40 சுங்கச்சாவடிகளின் கட்டணத்தை ஏப். 1ம் தேதி முதல் உயர்த்தி வசூலிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், சுங்கச்சாவடிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருந்தது. அதன்படி சென்னையை அடுத்துள்ள வானகரம், சூரப்பட்டு சுங்கச்சாவடிகள், சென்னை - கொல்கத்தா நெடுஞ்சாலையில் உள்ள நெல்லூர் சுங்கச்சாவடி, தாம்பரம் - திண்டிவனம் நெடுஞ்சாலையில் உள்ள ஆத்தூர் சுங்கச்சாவடி, செங்கல்பட்டில் உள்ள பரனூர் ஆகிய சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

சுங்கக்கட்டணம் உயர்வு அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிக்கும் எனவும், இதனால் மக்கள் சிரமப்படுவார்கள் என்றும் அரசியல் கட்சித் தலைவர்கள், வியாபாரப் பெருமக்கள், பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

---

### தமிழ்நாட்டுக்கான 100 நாள் வேலைத் திட்டம்! நிலுவைத் தொகை குறித்து

# ஒன்றிய அமைச்சர் பதிலளிக்க வேண்டும்!

## மக்களவையில் டி.ஆர்.பாலு நோட்டீஸ்!



புதுடெல்லி, ஏப். 2 -

தமிழ்நாட்டுக்கான100 நாள் வேலைத் திட்ட நிலுவைத் தொகை குறித்து, ஒன்றிய கிராமப்புற மேம்பாட்டு அமைச்சர் பதிலளிக்க வலியுறுத்தி மக்களவையில் டி.ஆர்.பாலு நோட்டீஸ் அளித்துள்ளார்.

மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலு அளித்துள்ள நோட்டீஸில், கடந்த 5 மாதங்களாக ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ள, 4 ஆயிரத்து 34 கோடி ரூபாய், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்ட நிதியை தமிழ்நாடு அரசு இதுவரை பெறவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டுக்கான 100 நாள் வேலைத் திட்ட நிலுவைத் தொகை குறித்து, ஒன்றிய கிராமப்புற மேம்பாட்டு அமைச்சர் மக்களவையில் பதிலளிக்க வேண்டுமென்றும் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அந்த நோட்டீசில் வலியுறுத்தியுள்ளார்.